# பத்திரிக்கை செய்தி குறிப்பு

ஈரோடு மாவட்டம், நம்பியூர் வட்டம், கரட்டுப்பாளையம், காராப்பாடி, கோவில்காட்டுத்தோட்டத்தை சேர்ந்த திரு.பெரியாக்கவுண்டர் மகன் திரு.சக்திவேல் என்பவர் தனது தகப்பனார் பெரியாக்கவுண்டர் மற்றும் தனது பெரியம்மா திருமதி.சுப்பாயாள் ஆகியோரது பெயரில் நில உரிமை சான்றுகளை அவர்கள் சார்பாக பெற கரட்டுப்பாளையம் "ஆ" கிராம நிர்வாக அலுவலர் திரு.எஸ்.பி.சுபாஷ்குமார் என்பவரை அணுகிய போது மேற்படி நில உரிமைச்சான்றிதழ்களை நம்பியூர் வட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து அவர் பெற்று வைத்துக்கொண்டு காலம் தாழ்த்தி வந்தவர் அதன் பின் நம்பியூர் "ஆ" கிராம நிர்வாக அலுவலராக பணிமாறுதலில் வந்தபிறகும் வாதியிடம் சான்றிதழ்களை கொடுக்காமல் இருந்துள்ளார். வாதி 14.8.2018 மற்றும் 18.8.2018 ஆகிய தேதிகளில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திரு.சுபாஷ்குமார் அவர்களை சந்தித்து நில உரிமை சான்றுகள் சம்மந்தமாக கேட்டபோது அவர் கையூட்டாக ரூ.20,000/-ஐ வாதியிடம் கேட்டுள்ளார். இறுதியாக 21.08.2018 அன்று 7 ஆயிரம் ரூபாய் கொடுத்தால்தான் நில உரிமை சான்றுகளை வழங்க முடியும் என்று திரு.எஸ்.பி.சுபாஷ்குமார் கையூட்டு கேட்டுள்ளார். இதுசம்மந்தமாக வாதி திரு.சக்திவேல் என்பவர் ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தொடர்ச்சியாக 24.8.2018ம் தேதி அன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திரு.சுபாஷ்குமார் அவர்கள் வாதி திரு.சக்திவேலிடம் ரூ.7000/-ஐ அவரது அலுவலகத்தில் வைத்து கையூட்டாக கேட்டு பெற்றுக்கொள்ளும்போது ஈரோடு மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசாரால் கையும் களவுமாக பிடிபட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார். வழக்கு விசாரணையில் உள்ளது.